A/L 2021

விரிவுரை
பேராசிரியர்.
தி. வேல்நம்பி

மாதிரி வினாத்தாள்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021
General Certificate of Education (Adv. Level) Examination, 2021

ගිණුම්කරණ I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** ஒவ்வொரு வினாவுக்கும் **சமனான** புள்ளிகள் உரித்தாகும்.
* உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
* **செய்நிரலாக்கத்தகா (Non Programminable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்**

சுட்டெண் : ..................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1ஆவது பரீட்சகர் | | |
| 2ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக / பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

1. எண்ணக்கருச் சட்டகத்தில் உள்ளடக்கப்படாத விடயமாகப் பின்வருவனவற்றுள் எதனைக் கருதமுடியும்?
   1) நிதிக்கூற்றுக்களின் நோக்கங்கள்
   2) நிதித் தகவல்களின் தரரீதியான பண்புகள்
   3) நிதிக் கூற்றுக்களின் மூலங்களுக்கான வரைவிலக்கணம், அளவீட்டு அடிப்படை மற்றும் இனங்காணல்
   4) முதலீட்டுக்கான எண்ணக்கருக்களும் மூலதன மேற்பார்வையும்
   5) நிதி ரீதியில் நிறுவனம் எதிர்நோக்கும் இடர்கள் பற்றிய விளக்கமும் அதற்கான தீர்வுகளும்

(.............)

2. பின்வருவனவற்றுள் நிதிக்கூற்றுக்களின் மூலங்களைச் சரியாகக் காட்டும் விடைத்தொகுதி எது?
   1) உரிமையாண்மை மாற்றக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று, வருமானக்கூற்று, சொத்துக்கள், பொறுப்புக்கள்
   2) சொத்துக்கள், செலவீனம், உரிமையாண்மை, பொறுப்பு, வருமானம்
   3) உரிமையாண்மை மாற்றக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று, வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று
   4) சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை, வருமானக்கூற்று
   5) வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று, குறிப்புக்களும் செய்கைகளும்

(.............)

3. நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகத்தின்படி நிதிக் கூற்றுக்களின் அடிப்படைத் தரரீதியான நிதித்தகவல்களின் பண்பினைக் காட்டும் விடைத்தொகுதி
   1) பொருத்தமான தன்மை (Relevance), உண்மையான பிரதிநிதித்துவம் (Faithful representation).
   2) பொருத்தமான தன்மை (Relevance), விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை (Understandability)
   3) காலந்தவறாமை (Times lines) உண்மையான பிரதிநிதித்துவம் (Faithful representation)
   4) ஒப்பிடக்கூடிய தன்மை (Comparability), காலந்தவறாமை (Time lines)
   5) விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை (Understandability), ஒப்பிடக்கூடிய தன்மை (Comparability)

(.............)

4. நிதிக்கூற்றுக்களின் கூறுகளைக் கொண்ட விடைத் தொகுதி எது?
   1) இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுடங்கிய வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று, உரிமையாண்மை மாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, குறிப்புக்களும் செய்கைகளும்
   2) சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை , வருமானம், செலவீனம்
   3) இயக்குநர் சபை அறிக்கை, முகாமையாளர் அறிக்கை, வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று
   4) சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை , இயக்குநர்சபை அறிக்கை, முகாமையாளர் அறிக்கை
   5) கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, காசுப்பெறுவனவு கொடுப்பனவு நாளேடு, சில்லறைக் காசேடு

(.............)

[பக். 2ஐப் பார்க்க]

5. நிதிநிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்படாத விடயம் பின்வருவனவற்றுள் எது?
   1) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்
   2) அருவச் சொத்துக்கள்
   3) வியாபார வருமதிகள் மற்றும் காசும் காசிற்குச் சமனானவையும்
   4) ஏற்பாடுகள்
   5) விற்பனை உத்தரவாதத்திற்கான செலவு

(............)

6. வணிகமொன்றில காணப்பட்ட கடன்கொடுத்தோர் தொகை ரூ. 30 000 ஆகும். உரிமையாளர் இதனைத் தனது சொந்த நிதியியல் முழுமையாகத் தீர்ப்பதற்காக ரூ. 27 000 காசு செலுத்தி இருந்தார். இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யும் போது கருத்தில் கொள்ளப்பட்ட வேண்டிய எண்ணக்கருக்களின் தொகுதியைச் சரியாகக் காட்டுவது.
   1. பண அளவு, இணைதல்
   2. அலகுசார், இணைதல்
   3. அலகுசார், பாதுகாப்பு
   4. அலகுசார், அட்டுறு
   5. இணைதல், தேறல்

(............)

7. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,
   ❖ பொறி இயந்திரம் ஒன்று கடனுக்குக் கொள்வனவு செய்தல் ரூ. 180 000
   ❖ துணி கொள்வனவு ரூ. 80 000
   ❖ ஆடை கடனுக்கு விற்பனை ரூ. 150 000
   ❖ கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ. 90 000

(............)

   இக் கொடுக்கல் வாங்கல்களை ஏடுகளில் முறையாகப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களினைச் சரியாகக் காட்டுவது.
   1. பொதுநாட் குறிப்பேடு, காசேடு, விற்பனை நாளேடு, காசோலை
   2. கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், பட்டியல், பற்றுச்சீட்டு
   3. நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், பற்றுச்சீட்டு
   4. பட்டியல், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, பட்டியல், பற்றுச்சீட்டு
   5. பொதுநாட்குறிப்பேடு, கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, காசேடு

(............)

8. நிறுவனமொன்று 2021.04.01 இல் ரூ. 60 000 இனை வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கு ஒன்றினை ஆரம்பித்தது. 2021.04.30 இல் வணிகத்தினுடைய வங்கிக்கூற்று மீதி ரூ. 22 000 (செலவு) ஆகக் காணப்பட்டது. வங்கிக்கூற்று மீதியும் நிறுவனக் கணக்கேட்டின்படியான வங்கி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள்.
   ♦ காசுக் கணக்கில் சீராக்கப்படாத வங்கிக் கட்டணம் ரூ. 2 200
   ♦ காசுக் கணக்கில் சீராக்கப்படாத பங்குலாபம் ரூ. 4 800
   ♦ வைப்புச் செய்து மறுத்த காசோலை ரூ. 5 000
   ♦ மாற்றப்படாத காசோலைகள் ரூ. 15 000

   2021.04.30 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும் வங்கி மீதியாக அமைவது
   1) ரூ. 7 000 வரவு
   2) ரூ. 37 000 செலவு
   3) ரூ. 3 600 வரவு
   4) ரூ. 13 600 வரவு
   5) ரூ. 7 000 செலவு

(............)

9. நிலத்துக்குச் சாதாரண நிலமையின் கீழ் பெறுமானத் தேய்வு விதிக்கப்படாமைக்கான காரணம் யாது?
   1) நிலத்தின் பெறுமதி நாளடைவில் அதிகரிக்கின்றது.
   2) நிலத்தின் பெறுமதியைத் துல்லியமாக மதிப்பிட முடியாது.
   3) எல்லா நிலங்களும் ஒரே பயன்பாட்டு ஆயுட்காலத்தைக் கொண்டுள்ளன.
   4) நிலத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் வரையறையற்றது.
   5) நிலத்தினைப் பயன்படுத்தும் போது பாவனை விரயம் ஏற்படுவதில்லை.

(............)

10. நிறுவனமொன்றின் 31 மார்ச் 2021 இலும் 31 மார்ச் 2020 இலும் நிதிநிலைமைக்கூற்றில் இருந்து தேர்ந்தெடுத்த உருப்படிகள் வருமாறு :

| | **2021.03.31** | **2020.03.31** |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 7 700 | 7 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 800 | 1 000 |
| பொது ஒதுக்கம் | 500 | 400 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 2 800 | 3 600 |

**மேலதிக தகவல்கள்**

- கூறப்பட்ட மூலதனத் தொகையில் சாதாரண பங்குகள் மட்டுமே உள்ளன.
- 2021.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் நிறுத்தி வைத்த வருவாயில் இருந்து பங்கு ஒன்று ரூ.30 விலையில் 20 000 சாதாரண பங்குகள் மூலதனமாக்கப்பட்டது.
- இடைக்காலத்தில் செலுத்திய பங்கு இலாபம் ரூ. 120 000 ஆகும்.

அ) 2020.03.31இல் உரிமையாண்மை மீதி எது?

1) ரூ. 1 400 2) ரூ. 3 000 3) ரூ. 4 400 4) ரூ. 2 600 5) ரூ. 3 200

(.............)

ஆ) 2021.03.31இல் நிறுவனத்தில் உழைக்கப்பட்ட வரிக்குப்பின் ஆண்டுக்கான இலாபம் யாது?

1) ரூ. 700 2) ரூ. 500 3) ரூ. 400 4) ரூ. 620 5) ரூ. 520

(.............)

11. வரையறுத்த சில்வா பொதுக்கம்பனியின் 2021.03.31 இல் கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகளின் மொத்தம் ரூ. 158 000 ஆகக் காணப்பட்டபோதும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு மீதி வேறொரு மீதியைக் காட்டியது. பரிசீலனை மேற்கொண்ட போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- நட்டக்கடனாகப் பதிவழிக்கப்பட்ட தொகை ரூ. 4 500 கடன்பட்டோர் மீதியொன்று கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிராத போதிலும் குறித்த கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்கில் வரவில் ரூ. 500 எனப் பதியப்பட்டது.
- செலவுத்தாள் ஒன்றின் பெறுமானம் ரூ. 2 300 உட்திரும்பல் நாளேட்டில் ரூ. 3 200 எனப் பதியப்பட்டிருந்தது.
- கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 11 000 காசோலை ஒன்று மறுக்கப்பட்டது இது கடன்பட்டோர் பேரேடு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய இரண்டிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

2021.03.31இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி

1) ரூ. 165 000 2) ரூ. 164 900 3) ரூ. 156 500 4) ரூ. 165 400 5) ரூ. 157 500

(.............)

12. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 2021.03.31இல்முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானதாகும் (000)

| | |
|---|---|
| விற்பனை | 1 200 |
| விற்பனைக் கிரயம் | 900 |
| 2020.04.01 இல் கடன்பட்டோர் | 230 |
| 2021.03.31 இல் கடன்பட்டோர் | 250 |

வருடத்தில் 360 வேலை நாட்கள் உள்ளன. விற்பனைகளில் ரூ. 240 000 காசு விற்பனையாகும்.

2021.03.31இல் முடிவுற்ற ஆண்டிற்கான தகவலின் அடிப்படையில் கடன்பட்டோரிடமிருந்து பணம் அறவிடும் காலத்தினைக் கணிப்பிடுக?

1) 12 நாட்கள் 2) 90 நாட்கள் 3) 60 நாட்கள் 4) 75 நாட்கள் 5) 66 நாட்கள்

(.............)

13. வணிகத்தின் மொத்த இலாபமும் தேறிய இலாபமும் 31.03.2021ல் முறையே ரூபா 715 000 உம் ரூ. 320 000 ஆகக் கணிக்கப்பட்டன. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுகொள்ளப்பட்டன

A. ரூபா 15 000 பெறுமதியான சரக்கு உருப்படி 01.04.2020 இல் இருமுறை பதிவிடப்பட்டது.

B. ரூபா 22 000 பெறுமதியான சரக்கிருப்பு உருப்படி 31.03.2021 இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

C. 31.03.2021 இல் சரக்கிருப்பு உருப்படியில் சேர்க்கப்பட்டிருந்த ரூபா 6 000 இதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 4 500 ஆகும்.

31.03.2021ல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான மொத்த இலாபமும் சரியான தேறிய இலாபமும்

| | மொத்த இலாபம் ரூபா | தேறிய இலாபம் ரூபா |
|---|---|---|
| 1) | 673 000 | 278 000 |
| 2) | 722 000 | 283 000 |
| 3) | 673 000 | 283 000 |
| 4) | 752 000 | 355 500 |
| 5) | 752 000 | 283 000 |

(.........)

14. பின்வருவனவற்றில் சரியான கூற்று/கூற்றுக்கள் எது/எவை?
    A- சொத்துக்கள் திரவத்தன்மைக்கேற்ப நிதிநிலைமைக் கூற்றில் ஒழுங்குபடுத்திக் காட்டப்படும்.
    B- பொறுப்புக்கள் நிதிநிலைமைக் கூற்றில் காலத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் காட்டப்படும்
    C- பாதுகாப்பு எண்ணக்கருவிற்கமைய காணியின் பெறுமதி மிகைப்படுத்திக் காட்டப்படுதல்.
    1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்
    4) A,B ஆகியன மாத்திரம் 5) A,B,C ஆகியன எல்லாம்

(.............)

15. ஊழியர் சேமலாப நிதிச்செலவுக் கணக்கு, முற்பணச் சம்பளம், உட்திரும்பல் கணக்கு, ஐயக்கடன் ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன தொடர்பில் ஒழுங்குமுறையாக வகைப்படுத்திக் காட்டப்படும் கணக்கு வகை பின்வருவனவற்றுள் எது?
    1) பொறுப்பு, சொத்து, செலவு, சொத்து 2) செலவு, சொத்து, வருமானம், பொறுப்பு
    3) பொறுப்பு, சொத்து, செலவு, பொறுப்பு 4) செலவு, சொத்து, வருமானம், சொத்து
    5) செலவு, சொத்து, செலவு, பொறுப்பு

(.............)

16. பின்வருவனவற்றுள் எவை கம்பனியொன்றின் தேறிய சொத்து மீது மாற்றத்தை ஏற்படுத்தாதவை
    A) வரிக்குப் பின் ஆண்டுக்கான இலாபம்
    B) நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து கூறப்பட்ட மூலதனமாக்குதல்
    C) நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல்
    D) சாதாரண பங்குதாரருக்கு பிரேரித்த இறுதிப் பங்கு இலாபம்
    1) A,B,C ஆகியன 2) B,C ஆகியன 3) A,D ஆகியன
    4) B,C,D ஆகியன 5) A மாத்திரம்

(.............)

17. பின்வரும் தகவல்கள் ஒரு தனிப்பொருளுடன் தொடர்புடையவையாகும்.

| | |
|---|---|
| பாதுகாப்பு எல்லை | ருபா 200 000 |
| பங்களிப்பு விற்பனை வீதம் | 40% |
| மொத்தப்பங்களிப்பு | ருபா 480 000 |

    நிலையான மேந்தலைகளின் பெறுமதி யாது?

    1) ருபா 200 000 2) ருபா 800 000 3) ருபா 400 000
    4) ருபா 520 000 5) ருபா 108 000

(.............)

18. உதிரிப்பாகங்கள் சிலவற்றைப் பொருத்துதல் செலவு ஒரு வருடத்திற்கு மேலாகப் பாவனை செய்யக்கூடியதாக இருந்தும் இவை கொள்வனவு செய்த வருடத்திலேயே இதன் கிரயம் வருமானக்கூற்றில் முழுமையாகச் செலவாகப் பதிவழிக்கப்பட்டது. இத்தகைய பதிவழிப்பு எந்த எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு செய்யபபட்டிருக்கிறது?
    1) இணைதல் 2) அட்டுறு 3) தேறல்
    4) பொருண்மை 5) கால அளவு

(.............)

19. கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எது / எவை கணக்கீட்டுச் சமன்பாட்டு மீதிகளின் மீது தாக்கத்தைச் செலுத்தாதவை

A - வங்கிக்கடன் மூலம் கடன் கொடுத்தோர் தொகை செலுத்தப்படல்

B - காசுக்கு தளபாடம் கொள்வனவு செய்தல்

C - கடன் கொடுத்தோருக்கு கழிவு இன்றி காசு செலுத்துதல்.

D -உரிமையாளர் வணிக வங்கிக்கடனை அடைப்பதற்கு தனது சொந்த நிதியினைப் பயன்படுத்தல்.

1) A,B மாத்திரம் 2) A,B,D மாத்திரம் 3) D மாத்திரம்

4) C.D மாத்திரம் 5) A,B,C,D ஆகியன எல்லாம்

(.............)

20. வரையறுத்த தினேஷ் பொதுக்கம்பனியின் 2021.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ்வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின்போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- உட்திரும்பல் ரூ. 3 000 வெளித்திருப்பல் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்துத ஆனால் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்துத.
- பதிவழிக்கப்பட்ட நட்டக்கடன் மீளப்பெறப்பட்டமை ரூ. 5 000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவிலும் கடன்பட்டோர் கடடுடுப்பாட்டுக் கணக்கில் செலவிலும் பதிவுசெய்யப்பட்டதுடன் வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- கொள்வனவு நாளேடு ரூ. 10 000 இனால் குறைவாக கூட்டப்பட்டிருந்தது.

மேற்படி பிழைகளைத் திருத்துவதற்கு முன்னரான தொங்கல் கணக்கு மீதி

1) ரூ. 16 000 வரவு 2) ரூ. 6 000 செலவு 3) ரூ. 11 000 வரவு

4) ரூ. 16 000 செலவு 5) ரூ. 6 000 வரவு

(.............)

21. ஒரு தனித்த பொருள் தொடர்பாக பின்வருவனவற்றில் எது அலகொன்றின் பங்களிப்பை அதிகளவு உயர்த்தும்

1) விற்பனை தொகையில் 10% அதிகரிப்பு

2) விற்பனை விலையில் 10% அதிகரிப்பு

3) நிலையான கிரயத்தில் 10% குறைவு

4) அலகொன்றுக்கான மாறும் கிரயத்தில் 10% குறைவு

5) அலகொன்றுக்கான பங்களிப்பில் 10% அதிகரிப்பு

(.............)

22. கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ஊதியம் தொடர்பில் கவனத்திற்கொள்க.

A - கல்லூரி ஒன்றில் ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படும் சம்பளம்

B - ஆடை தைக்கும் தொழிற்சாலையொன்றில் துணி வெட்டுபவருக்கான மாதாந்த சம்பளம்

C - தேயிலை உற்பத்தி கம்பனியில் கொழுந்து பறிப்போரின் சம்பளம்

D - வெதுப்பகம் ஒன்றின் முகாமையாளரின் சம்பளம்

தரப்பட்டுள்ளவற்றுள் நேர்க்கூலியாக வகைப்படுத்தக்கூடியவை

1) B,C 2) A,C 3) A,B,C 4) A,C,D 5) A,B,C,D

(.............)

23. கம்பனியொன்றுடன் தொடர்புடைய 2021.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| வருடத்திற்கான இலாபம் | 900 000 |
| வருடத்திற்கான வருமானவரிச் செலவு | 140 000 |
| வருடத்தில் செலுத்திய வருமானவரி | 90 000 |
| சரக்கிருப்பில் ஏற்பட்ட குறைவு | 30 000 |
| கடன்பட்டோரில் ஏற்பட்ட அதிகரிப்பு | 70 000 |
| வருடத்திற்கான பெறுமானத் தேய்வு | 110 000 |
| கடன்கொடுத்தோரில் ஏற்பட்ட குறைவு | 40 000 |

[பக். 6ஐப் பார்க்க]

**LKAS - 07 (காசுப்பாய்ச்சல் கூற்று)** இன்படி 2021.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

1) ரூ. 980 000 2) ரூ. 840 000 3) ரூ. 1 040 000
4) ரூ. 1 060 000 5) ரூ. 920 000

(.............)

24. பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் 2021 மார்ச் மாதத்துடன் தொடர்புடையது

| | ரூ. 000 |
|---|---|
| மூலப்பொருள் இருப்பில் தேறிய குறைவு | 20 |
| உற்பத்திக் கிரயம் | 450 |
| குறைவேலை இருப்பில் தேறிய அதிகரிப்பு | 50 |
| முடிவுப்பொருள் இருப்பில் தேறிய குறைவு | 100 |
| நேர் ஊழியம் | 200 |
| பயன்படுத்திய மூலப்பொருள் | 120 |

நிறுவனத்தின் 2021 மார்ச் மாதத்திற்கான உற்பத்தி மேந்தலை மற்றும் விற்பனைக் கிரயம் பின்வருவனவற்றுள் எது?

| | **உற்பத்தி மேந்தலை** | **விற்பனை கிரயம்** |
|---|---|---|
| 1) | 180 000 | 350 000 |
| 2) | 80 000 | 550 000 |
| 3) | 180 000 | 550 000 |
| 4) | 130 000 | 350 000 |
| 5) | 160 000 | 500 000 |

(.............)

25. கம்பனி ஒன்றினுடைய 2021.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று பின்வருமாறு.

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் ரூ (000) | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ (000) | பொது ஒதுக்கம் ரூ (000) | நிறுத்தி வைத்த வருவாய் ரூ (000) |
|---|---|---|---|---|
| 2014.04.01 | 6 000 | 150 | 300 | 750 |
| உபகாரப் பங்கு வழங்கல் | 400 | | | (400) |
| பொது ஒதுக்க மாற்றம் | | | 100 | (100) |
| செலுத்திய பங்கு இலாபம் | | | | (120) |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | | (100) | | 110 |
| | 6 400 | 50 | 400 | 900 |

**மேலதிக தகவல்கள்**

- கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் முதல் தடவையாக மிகையாக மதிப்பிடப்பட்ட கட்டடம் 2021.03.31இல் மீண்டும் மீள்மதிப்பிடப்பட்டுச் சரியான பதிவுகள் கணக்குகளில் பதியப்பட்டன.
- 2021.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான வரிச் செலவு ரூ. 130 000 ஆகும்.

மேற்படி தகவல்களின்படி 2021.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு யாது?

1) ரூ. 770 000 2) ரூ. 650 000 3) ரூ. 670 000 4) ரூ. 550 000 5) ரூ. 420 000

(.............)

26. கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒன்று தொடர்பாகப் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. (2021 மார்ச் மாதத்துடன் தொடர்புடையது)

| விபரம் | உற்பத்தி திணைக்களம் | | சேவைத் திணைக்களம் |
|---|---|---|---|
| | x | y | |
| பாதிடப்பட்ட மேந்தலை (ரூபா) | 360 000 | 250 000 | 50 000 |
| பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம் | 18 000 | 13 500 | |
| அலகொன்றின் உற்பத்திக்கு ஏற்பட்ட இயந்திர மணித்தியாலம் | 5 | 3 | |

- குறித்த மாதத்தில் ஏற்பட்ட முதன்மைக் கிரயம் 390 000
- உற்பத்தி செய்த அலகுகள் 1000
- சேவைத் திணைக்கள மேந்தலை உற்பத்தித் திணைக்களங்களிடையே (x, y) முறையே 3:2 என மீள் பகிர்வு செய்யப்படுகின்றது.
- இயந்திர மணித்தியால அடிப்படையில் மேந்தலை உறிஞ்சப்படுகின்றது.

அலகொன்றுக்கான உற்பத்திக்கிரயம் யாது?

1) ரூ. 600 2) ரூ. 210 3) ரூ. 750
4) ரூ. 1 050 5) ரூ. 1 000

(.............)

27. கம்பனியொன்றின் மேந்தலைகள் நேர் ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன. 2000 அலகுகள் உற்பத்தியுடன் தொடர்புபட்ட தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| பாதிடப்பட்ட மேந்தலைகள் | ரூ. 360 000 |
| உண்மையாக ஏற்பட்ட உற்பத்தி மேந்தலைகள் | ரூ. 380 000 |
| அலகு ஒன்றுக்கு உண்மையாக ஏற்பட்ட நேர் ஊழிய மணத்தியாலம் | 5 |
| அலகு ஒன்றினால் உறிஞ்சப்பட்ட மேந்தலை | ரூ. 200 |

பாதிடப்பட்ட நேர் ஊழிய மணத்தியாலம் யாது?

1) 10 000 2) 9 500 3) 7 200 4) 1 900 5) 9 000

(.............)

28. கம்பனியொன்றின் வருடாந்த நிதி அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு.

| | 2021.03.31இல் உள்ளபடி (ரூ) | 2020.03.31 இல் உள்ளபடி (ரூ) |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 500 000 | 400 000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | - | 100 000 |
| பொது ஒதுக்கம் | 90 000 | 60 000 |
| நிறுத்தி வைத்த வருமானம் | 140 000 | 180 000 |

**மேலதிக தகவல்கள்**

1. 2021.03.31 இல் முடிவடைந்த ஆண்டொன்றுக்குச் செலுத்திய பங்கு இலாபம் ரூ.30000.
2. 2021.03.31 இல் நிறுத்தி வைத்த வருவாயைப் பயன்படுத்தி உபகாரப்பங்குகள் வழங்கப்பட்டது.
3. 2020.03.31 இங்கு முன்னர் மிகையாக மதிப்பிடப்பட்ட காணி 2021.03.31இல் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் ரூ. 100 000 குறைத்து மதிப்பிடப்பட்டது.

2021.03.31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் யாது?

1) ரூ.120 000 2) ரூ.140 000 3) ரூ.100 000 4) ரூ. 70 000 5) ரூ.170 000

(.............)

29. பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் 2021 மார்ச மாதத்துடன் தொடர்புடையதாகும்.

| | (ரூ 000) |
|---|---|
| குறைவேலையில் அதிகரிப்பு (முதன்மைக் கிரயத்தால் மதிப்பிடப்பட்டது) | 200 |
| பயன்படுத்திய நேர்மூலப்பொருள் | 500 |
| நேர் ஊழியம் | 300 |
| முடிவுப் பொருள் இருப்பில் குறைவு | 100 |

உற்பத்தி மேந்தலைகள் முதன்மைக் கிரயத்தால் 40% உறிஞ்சப்படுகின்து.

நிறுவனத்தின் 2021 மார்ச் மாதத்திற்கான உற்பத்தி மேந்தலைகளும் விற்பனைக்கிரயமும் பின்வருவனவற்றுள் எது?

| | உற்பத்தி மேந்தலைகள் (ரூபா) | விற்பனைக்கிரயம் (ரூபா) |
|---|---|---|
| 1) | 320 000 | 1 220 000 |
| 2) | 320 000 | 1 020 000 |
| 3) | 240 000 | 940 000 |
| 4) | 400 000 | 1 300 000 |
| 5) | 240 000 | 740 000 |

(.............)

30. பொருளொன்றின் மொத்தக்கிரயத்திற்குச் சமமாவது
1. நேர்ப்பொருள் கிரயம் உற்பத்திக் கிரயம் என்பவற்றின் மொத்தமாகும்.
2. முதன்மைக் கிரயம், உற்பத்தி மாறும், மேந்தலை, உற்பத்தி நிலையான மேந்தலை என்பவற்றின் மொத்தமாகும்.
3. நிலையான கிரயம், மாறும் கிரயம் என்பவற்றின் மொத்தமாகும்.
4. உற்பத்திக்கிரயம், உற்பத்தியல்லாக் கிரயம் மாறும் மேந்தலை, உற்பத்தி நிலையான மேந்தலை என்பவற்றின் மொத்தமாகும்.
5. உற்பத்திக் கிரயம், மாற்றல் கிரயம், உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயம் என்பவற்றின் மொத்தமாகும்.

(.............)

♦ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

**31, 32 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

தேசிகன் கம்பனியானது புதிய இயந்திரமொன்றை வாங்குவதற்கான பிரேரணை ஒன்றை மதிப்பிடுகின்றது. இது தொடர்பாகத் தரப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு.

முதலீட்டின் கிரயம் ரூபா 190 000

எஞ்சியபெறுமதி ரூபா 10 000

| வருடம் | 10% முதலீட்டின் கழிவு காரணி | வருடாந்த விற்பனை | வருடாந்த பெறுமான தேய்வு உட்பட செலவுகள் |
|---|---|---|---|
| 0 | 1 | - | - |
| 1 | 0.91 | 180 000 | 130 000 |
| 2 | 0.83 | 110 000 | 110 000 |
| 3 | 0.75 | ? | 105 000 |

முதலீட்டின் திரும்பப்பெறும் காலம் 2 வருடங்களும் 4 மாதங்களுமாயின்

31. 3ம் வருடத்திற்கான
i) விற்பனை வருமானம் ரூ. …………………….
ii) தேறிய காசுப்பாய்ச்சல் ரூ. …………………….

32. இம் முதலீட்டின் தேறிய நிகழ்காலப் பெறுமதியைக் கணிப்பிடுக. ரூ. ................................

33. கணக்கீட்டின் வெளியீடுகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

34. xyz கம்பனியில் மோட்டார் வாகனத்தின் கிரயம் 01.04.2021 இல் ரூபா 600 000 ஆகக் காணப்படுகின்றது. இம் மோட்டார் வாகனமானது 01.04.2016 இல் கொள்வனவு செய்யப்பட்டதோடு அத்தினத்தில் அதன் பயன்படு ஆயுட்காலம் 20 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது. 01.04.2020 இல் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டின்படி இவ் மோட்டார் வாகனம் இன்னும் 10 ஆண்டுகள் மட்டுமே பயன்படும் என மதிப்பிடப்பட்டிருந்தது. இம் மதிப்பீட்டு மாற்றத்தைக் கணக்கில் காட்டும் அடிப்படையைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

35. ஒரு தனித்த பொருள் விற்பனை மட்ட அலகுகளின்போது அலகிற்குரிய இலாபங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| **விற்பனைமட்ட அலகுகள்** | **விற்பனைமட்ட அலகிற்கான இலாபங்கள்** |
|---|---|
| 3 000 | ரூ. 8 |
| 5 000 | ரூ. 14.40 |

10 000 அலகு விற்பனை மட்டத்தில் நிறுவனம் தற்போது காணப்படுகின்றது வேண்டப்படுவது

1) சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்) ……………………………………..

2) இச் செயற்பாட்டு மட்டத்தில் இலாபம் ரூ. ……………………………………..

36. வெற்றிடங்களை நிரப்புக.

| **விபரம்** | **நோக்கம்** |
|---|---|
| 1) கொள்வனவுக் கட்டளை | ……………………………………………………………… |
| 2) கொள்வனவு வேண்டுகோள் பத்திரம் | ……………………………………………………………… |
| 3) களஞ்சிய வேண்டுகோள் பத்திரம் | ……………………………………………………………… |
| 4) பொருள் பெற்றதற்கான குறிப்பு | ……………………………………………………………… |

37. சிக்கனக் கட்டளைத் தொகையினைத் தீர்மானிக்கும் இரண்டு வகையான கிரயங்கள் யாவை?

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

38. ரங்கன் விளையாட்டுக் கழகம் 100 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தவர் ஒருவரின் வருடாந்தச் சந்தா ரூ. 2 400 ஆகும். பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **31.03.2021ல் உள்ளபடி** | **31.03.2020ல் உள்ளபடி** |
|---|---|---|
| முற்பணமாகப் பெற்ற சந்தா | 24 000 | 12 000 |
| நிலுவையாக உள்ள சந்தா | 36 000 | 48 000 |

இவ்விழையாட்டுக் கழகத்தின் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான இனங்காணப்பட்ட சந்தா வருமானம் ரூ. ………………………

ஆ) 31.032021 இல் முடிவடையும் வருடத்தில் பெற்ற மொத்த சந்தா ரூ. ………………………

[பக். 10ஐப் பார்க்க]

♦ **39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
கமலன் விமலன் ஆகியோரின் பங்குடமை உடன்படிக்கையில் மூலதன வட்டி செலுத்துவதைத் தவிர இலாபப் பகிர்வு தொடர்புடைய உடன்படிக்கை காணப்படவில்லை. 2021 இல் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | | ரூபா |
|---|---|---|
| வருடத்திற்கான இலாபம் | | 200 000 |
| செலுத்திய மூலதன வட்டி | கமலன் | 40 000 |
| | விமலன் | 60 000 |
| வருடத்திற்கான பற்றுக்கள் | கமலன் | 25 000 |
| | விமலன் | 20 000 |
| 2020.04.01ல் நடைமுறைக் கணக்கு மீதிகள் | கமலன் | 30 000 |
| | விமலன் | 50 000 |
| 2021.03.31 மூலதனக் கணக்கு மீதிகள் | கமலன் | 400 000 |
| | விமலன் | 600 000 |

39. இலாபப் பகிர்வுக்குப் பின்னரான 2021.03.31 இல் உள்ளவாறான நடைமுறைக் கணக்குகளின் மீதிகள்?
கமலன் ரூ. ………………………….
விமலன் ரூ. ………………………….

40. 2021.03.31 இல் உள்ளவாறான பங்குடமையின் மொத்த உரிமையாண்மை ரூ. ………………………………..

41. வணிக நிறுவனமொன்றினால் தயாரிக்கப்படும் இலாப நட்டக்கூற்றுக்கும் காசுப்பாய்சல் கூற்றுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக?

| **இலாப நட்டக்கூற்று** | **காசுப்பாய்சல் கூற்று** |
|---|---|
| 1. ……………………………………………… | ……………………………………………… |
| 2. ……………………………………………… | ……………………………………………… |

42. **LKAS 08 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்)** இன்படி கணக்கீட்டுக் கொள்கைகளைக் கம்பனி மாற்றக்கூடிய இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?
1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

43. இணைதல் எண்ணக்கருவிற்கமையச் சீராக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளுக்கு 3 உதாரணம் தருக?
1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………

♦ **44, 45 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
உற்பத்திக் கம்பனியொன்றின் கிரயம் தொடர்பான தகவல்கள்

| | ரூபா |
|---|---|
| அலகு விற்பனை விலை | 100 |
| அலகு நேர் பொருள் | 200 |
| அலகு நேர் கூலி | 6 |
| அலகு உற்பத்தி மாறும் மேந்தலை | ? |
| அலகு உற்பத்தியல்லா மாறும் மேந்தலை | 9 |
| உற்பத்தி நிலையான மேந்தலை | 60 000 |
| உற்பத்தியல்லா நிலையான மேந்தலை | 55 000 |

[பக். 11ஐப் பார்க்க]

குறித்த விற்பனைமட்டங்களில் அதன் மொத்தக் கிரயம் வருமாறு:

| உற்பத்தி மட்டம் அலகுகள் | மொத்தக் கிரயம் |
|---|---|
| 5000 | 290 000 |
| 7000 | 370 000 |

44. 2000 அலகு உற்பத்தி மட்டத்தில்
முதன்மைக் கிரயம் ரூ. ……………………
உற்பத்திக்கிரயம் ரூ. ……………………

45. 2000 அலகு விற்பனை மட்டத்தில்
உற்பத்தியல்லாக்கிரயம் ரூ. ……………………
இலாபம் ரூ. ……………………

46. 2021 மார்ச் மாதத்திற்கான சம்பளப் பட்டியலின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது


| **விபரங்கள்** | **ரூ. 000** |
|---|---|
| மொத்த சம்பளம் | 3 000 |
| **கழிப்பனவு** | |
| EPF 10% (அடிப்படை சம்பளத்தில்) | (240) |
| சம்பள முற்பணம் | (160) |
| தேறிய சம்பளம் | 2 600 |

தொழில் வழங்குநர் அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) 15% உம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 3% உம் பங்களிப்புச் செய்கின்றார். இதற்கான பணம் ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்திற்குத் தொடர்ந்துவரும் மாதத்தில் அனுப்பப்படுகிறது.

அ) மார்ச் மாதத்திற்கான ஊழியர் சேமலாப நிதிச் செலவு ரூ. ……………………………………
ஆ) 2021.03.31 இல் உள்ளவாறான ஊழிய சேலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதிய பொறுப்புக்கள் யாவை?

1) ஊழியர் சேமலாப நிதி ரூ. ………………………….
2) ஊழியர் நம்பிக்கை நிதி ரூ. ……………………….

47. தரப்பட்டுள்ள சமப்பாட்டுப்புள்ளி வரைபடத்தில் ஆங்கில எழுத்துக்களால் சுட்டிக்காட்டப்படும் விடயங்களைக் குறிப்பிடுக.
1. A - ………………………………………………
2. B - ………………………………………………
3. C - ………………………………………………
4. D - ………………………………………………




48. பின்வரும் பதங்களுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக
1. பந்தாய அட்டை, களஞ்சியப்பேரேடு
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
2. நேரக் கூலி, துண்டுக் கூலி
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

49. ஒரு வியபாரி தொலைக்காட்சிப் பெட்டிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகின்றார். ஒரு பெட்டி ரூ. 15 000 படியாக 24 பெட்டிகள் கொள்வனவு செய்யும்போது ஒரு பெட்டி மேலதிகமாகக் கிடைத்தது. அத்துடன் கொள்வனவின்போது வியாபாரக் கழிவு ஒரு பெட்டிக்கு 4% கிடைக்கப் பெற்றது.
இக் கொள்னவு விற்பனை தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் வருமாறு :
அ - கப்பல் கட்டணம் காப்புறுதிக் கட்டணம் பெட்டி ஒன்றுக்கு ரூ 500
ஆ - ஆவணங்கள் தயார் செய்வதற்கான கிரயம் ரூ. 12 500
இ - ஏற்றியிறக்கும் கூலி ரூ. 25 000
ஈ - தொலைக்காட்சிப் பெட்டி விற்பனைச் செலவுகள் ரூ. 37 500
உ - விளம்பரச் செலவுகள் 5 000

ஒன்று ரூ. 25 000 படி 18 தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனை செய்யப்பட்டன.

விற்பனையாகாத தொலைக்காட்சிப் பெட்டி இருப்புக்களின் கிரயம் ரூ. ..............................................

50. அரவிந் பொதுக்கம்பனியின் 2021.03.31இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு:

| | ரூபா 000 |
|---|---|
| விற்பனைக்கிரயம் | 2 500 |
| காணி மீள் மதிப்பீட்டு மிகை | 300 |
| விற்பனை வருமானம் | 3 600 |
| விற்பனை விநியோகச் செலவு | 20 |
| தளபாட உபகரண மீள் மதிப்பீட்டுக் குறைவு | 90 |
| நிலைய நிர்வாகச் செலவு | 250 |
| மோட்டார் பகுதி மாற்றுதல் இலாபம் | 320 |

கம்பனியானது 2020.03.31இல் முடிவடைந்த வருடத்தில் தளபாட உபகரண மீள் மதிப்பீட்டு மிகை ரூ. 50 000 பகிர்ந்துள்ளதுடன் இது உரிமையாண்மையில் உள்ளடக்கப்பட்டது.

2021.03.31இல் முடிவடைந்த வருடத்தில் வருமானக்கூற்றில்
1. இனங்காணப்பட்ட மொத்த வருமானம் ரூ. ……………………..
2. மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூ. ……………………..

***